


**15. 12. 2025**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி ஜோர்டன் நாட்டு தலைவர்களுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார்.

2. ஆளும் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களிடையே ஏற்பட்ட கடும் வாக்குவாதத்தால் மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப் பட்டது.

3. விமான கட்டணங்கள் முழுவீச்சில் கண்காணிக்கப்படுவதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு.ராம்மோகன் நாயுடு மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்.

4. தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான பி.ஜே.பி. மேலிட பொறுப்பாளராக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார்.

5. முல்லை பெரியாறு அணையில் மத்திய துணை கண்காணிப்பு குழுவினர் இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி, 4 நாள் அரசுமுறை பயணமாக ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் நாடுகளுக்கு இன்று புறப்பட்டார்.

தமது பயணத்தின் முதல் கட்டமாக ஜோடார்ன் செல்லும் பிரதமர், மன்னர் 2-ம் அப்துல்லா பின் அல் ஹுசைன் மற்றும் அந்நாட்டு பிரதமர் ஜாஃபர் ஹசன் ஆகியோருடனும் விரிவான பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

அமானில் இந்தியா வம்சாவளியினரை சந்தித்தும் பிரதமர் உரையாற்றுகிறார்.

இந்தியா – ஜோர்டன் இடையிலான தூதரக உறவுகள் நிறுவப்பட்டதன் 75-வது ஆண்டில் பிரதமர் அந்நாட்டிற்கு செல்வது முக்கியத்துவம் பெறுகிறது.

அமானிலிருந்து தமது பயணத்தின் 2-ம் கட்டமாக நாளை எத்தியோப்பியா தலைநகர் Addis Ababa செல்லும் பிரதமர், விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதுடன் நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்திலும் உரையாற்றுகிறார்.

தமது பயணத்தின் 3-வது மற்றும் இறுதி கட்டமாக நாளைமறுநாள் ஓமன் தலைநகர் மஸ்கட் செல்லும் பிரதமர், ஓமன் மன்னருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

ஸ்குவாஷ்

உலககோப்பை ஸ்குவாஷ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய அணியை பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

இவ்வெற்றி நாடுமுழுவதும் உள்ள இளம் விளையாட்டு வீரர்களுக்கு உத்வேகம் அளிப்பதோடு, ஸ்குவாஷ் விளையாட்டை மேலும் ஊக்குவிக்கும் என்று கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

பிரதமருக்கு எதிராக ஆட்சேபகரமான கருத்துக்களை காங்கிரஸ் தலைமை தெரிவித்ததாக கூறப்படுவது உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளால் ஆளும் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களிடையே நிலவிய கடும் வாக்குவாதங்களால் மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவை இன்று கூடியதும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு புதுதில்லியில் நேற்று நடைபெற்ற ஊர்வலத்தின் போது பிரதமருக்கு எதிராக காங்கிரஸ் கூறிய கருத்துக்கள் தொடர்பான பிரச்சனைகளை எழுப்பி அதற்கு கண்டனம் தெரிவித்தார்.

இத்தகைய கருத்துக்கள் துரதிருஷ்டவசமானது, ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் அவர் கூறினார்.

இப்பிரச்சனையில் உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே அவை நண்பகல் வரை முதலில் ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதால் நிலவிய கூச்சல் குழப்பங்களால் பிற்பகல் வரை அவை நடத்தும் அலுவலர் அவையை ஒத்திவைத்தார்.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்தது.

அவை இன்று கூடியதும் மத்திய அமைச்சர் திரு. ஜே. பி. நட்டா, காங்கிரஸ் கூறிய கருத்துக்கு மாநிலங்களவை எதிர்கட்சித்தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேயும்,

காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி. சோனியா காந்தியும் மன்னிப்பு கோர வேண்டுமென்று வலியுறுத்தினார்.

இதனால் அமளி நிலவவே அவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ச் அவையை நண்பகல் வரை ஒத்திவைத்தார்.

இதனிடையே நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய திரு. கிரண் ரிஜுஜு,

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேயும், மக்களவை எதிர்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தியும், நாடாளுமன்ற அவைகளிலிருந்து மன்னிப்பு கோர வேண்டுமென்று வலியுறுத்தினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி யாரையும் அவதூறாகவோ அச்சுறுத்தும் வகையிலோ அவமதித்தது கிடையாது என்றும் திரு. ரிஜுஜு குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

விமான கட்டணம்

சிவில் விமான போக்குவரத்து கழகத்தின் தலைமையகத்தின் கண்காணிப்பு பிரிவு விமான கட்டணங்களை முனைப்புடன் ஆராய்ந்து வருவதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு.ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அவர், உள்நாட்டு போக்குவரத்து சேவையோடு, வெளிநாட்டு சேவைக்கான கட்டணங்களும் கண்காணிக்கப் படுவதாக அவர் குறிப்பிட்டார்.

விமான கட்டணங்கள் உயரும் போதெல்லாம் அமைச்சகம் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக கூறினார்.

இண்டிகோ விமான போக்குவரத்து நெருக்கடியால் தினசரி போக்குவரத்து பெருமளவு ரத்து செய்யப்பட்டபோது, அமைச்சகம் தலையிட்டு விமான கட்டணங்கள் நியாயமாக இருப்பதை உறுதி செய்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

விமான கட்டணம் அதிகமாக இருப்பதாக விமான பயணிகள் கருதினால் ஏர் சேவா இணையதள மூலம் அமைச்சகத்திற்கு Screen Shot மூலம் அனுப்பலாம் என்று கூறினார்.

அமைச்சகம் சம்மந்தப்பட்ட விமான நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

❖❖❖❖❖❖❖❖

<u>பியூஷ் கோயல்</u>

நாட்டின் சூரிய மின்சக்தி திறன் கடந்த 11 ஆண்டுகளில் 46 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தக தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இந்தியா செறிவூட்டப்பட்ட 4-வது பெரிய நிலக்கரி மையமாக திகழ்கிறது என்று கூறினார்.

சென்ற ஆண்டு நாட்டின் ஒரு பில்லியன் டன் நிலக்கரி உற்பத்தியால் 8 சதவிகித அளவிற்கு இறக்குமதி குறைந்ததாக சுட்டிக்காட்டினார்.

காற்றாலை மின் உற்பத்தி திறன் தற்போது53 கிகா வாட்டாக உயர்ந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

எரிசக்தியில் கடந்த 11 ஆண்டுகளாக மத்திய அரசு பல்வேறு சீர்மிகு நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை வழங்கியதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

<u>சர்தார் வல்லப்பாய் பட்டேல்</u>

சர்தார் வல்லப்பாய் பட்டேலின் 75-வது நினைவு தினத்தை ஒட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதா கிருஷ்ணன்,

பிரதமர் திரு. நரேந்திர மோடி,

உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா உள்ளிட்டோர் அவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்ட சமஸ்தானங்களை ஒருங்கிணைத்து, அவர் ஆற்றிய அளப்பரிய சேவை என்றென்றும் நினைவு கூறப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்குமார் கோயல்

மத்திய தலைமை தகவல் ஆணையராக முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு.ராஜ்குமார் கோயல் இன்று பதவியேற்றார்.

அவருக்கு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

மத்திய அமைச்சகங்கள்

நிர்வாக சீர்த்திருத்தங்கள் மற்றும் பொது குறைதீர்ப்பு துறை, மத்திய அமைச்சகம் துறைகளின் செயல்பாடு குறித்த நவம்பர் மாத அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதன்படி சென்றமாதம் 42 ஆயிரம் குறைகளுக்கு சராசரியாக 16 நாள் கால அவகாசத்தில் மத்திய அமைச்சகங்கள் தீர்வு கண்டுள்ளதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு, அஞ்சல், மத்திய நேரடி வரிவாரியம், சுங்கத்துறை உள்ளிட்டவை அட்டவணை தரவரிசையில் முன்னணி இடங்களை பெற்றிருப்பதாகவும், நாடாளுமன்ற விவகாரம், மின்சாரம், நிலக்கரி துறைகள் அதற்கடுத்த இடத்தை வகிப்பதாகவும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

சட்டப்பேரவை தேர்தல்

தமிழகத்தில் வரவிருக்கும் சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி பி.ஜே.பி. சார்பிலான நிலைப்பாடுகளை மேற்கொள்ள மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயலை தேர்தல் மேலிட பொறுப்பாளராக பி.ஜே.பி. நியமனம் செய்துள்ளது.

மத்திய அமைச்சர்கள் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால், திரு. முரளீதர் மோஹல் ஆகியோர் இணை பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

பணவீக்க விகிதம்

நாட்டின் வருடாந்திர பணவீக்க விகிதம் சென்ற மாதம் 0.32 சதவிகிதமாக இருந்தது.

இது அதற்கு முந்தைய மாதத்தை காட்டிலும் 0.89 சதவிகிதம் குறைவாகும்.

மாதாந்திர அடிப்படையில் மொத்த விலை குறியீட்டு எண் 0.71 சதவிகிதமாக அதிகரித்துள்ளதாகவும், மத்திய வர்த்தக அமைச்சகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

❖❖❖❖❖❖❖❖

அஇஅதிமுக

தமிழகல் சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக சார்பில் போட்டியிடுவதற்கான விருப்ப மனுக்கள் விநியோகம் இன்று தொடங்குகிறது.

வரும் 23-ம் தேதிவரை காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை கட்சி அலுவலகத்தில் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

முல்லை பெரியாறு ஆய்வு

முல்லை பெரியாறு அணையை மத்திய தேசிய துணை கண்காணிப்பு குழுவினர் இன்று நேரில் ஆய்வு செய்தனர்.

தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய தென்மண்டல இயக்குநர் திரு. கிரிதர் தலைமையிலான இக்குழுவினர், தேக்கடியிலிருந்து படகு மூலம் அணைக்கு சென்று பிரதான அணை, பேபிஅணை, மதகுகள், நீர்மட்டம், சுரங்கப்பாதை, கசிவுநீர் உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் பார்வையிட்டனர்.

இந்த ஆய்வு அடிப்படையிலான அறிக்கை தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படும்.

❖❖❖❖❖❖❖❖

திருப்பூர் வாய்ஸ்

திருப்பூரில் முறையான திடக்கழிவு மேலாண்மையை 3 மாதத்தில் அமல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. மதுசூதனன் தெரிவித்திருக்கிறார்

திருப்பூர் மாநகராட்சி இன்று நடைபெற்ற கூட்டத்தில் பேசியஅவர், இதற்காக 7 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

வைகை வாய்ஸ்

வைகை அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு 3 ஆயிரத்து 469 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளதால் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட கரையோர பகுதி மக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

இது குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

கோவில்

கார்த்திகை மாத கடைசி சோமவாரத்தை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து சிவாலயங்களிலும் இன்று சங்காபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

வாலிபால்

தென் மண்டல பல்கலைக்கழங்களுக்கு இடையிலான மகளிர் வாலிபால் சாம்பியன் போட்டி சென்னை காட்டாங்குளத்தூர் SRM வேளாண்மை கல்லூரியில் இன்று நடைபெறுகிறது.

வரும் 19-ம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் தென்னிந்தியாவிலிருந்து 100 பல்கலைக்கழக மகளிர் அணிகள் பங்கேற்கின்றன.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான
4-வது 20-20 கிரிக்கெட் போட்டி லக்னோவில் நாளைமறுநாள் நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

5-வது இறுதிப்போட்டி வரும் வெள்ளிக்கிழமை அஹமதாபாத்தில் நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖